ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (த)

மதுரை

# கல்லூரி ஆண்டு மலர்

# 2020 - 2021

# கல்லூரி ஆண்டு மலர்

# 2021 – 2022

கவின்மிகு கடம்பவனமாம் நான்மாடக் கூடலின் வைகை நதிக்கரையோரத்தில் பெண்கல்வி முன்னேற்றதிற்காக பேரறிவு ஒளிபாய்ச்சும் கலங்கரை விளக்கமாக உயர்ந்து நிற்கும் கல்விக் கோட்டையான எம் கல்லூரியாம் ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரியின் சிறப்பு பூக்களின் கதம்ப மாலையே இம்மலர்.

. இக்கல்லூரி 1965 ஆம் ஆண்டு 320 மாணவிகள், 13 பேராசிரியர்கள், 13 அலுவலகப் பணியாளர்களுடன் செயல்படத் துவங்கி, 57 ஆண்டுகளாக திறம்பட செயல்பட்டு வருகிறது.

2021 – 2022 ஆம் கல்வியாண்டில் சுமார் 4700க்கு மேற்பட்ட மாணவியர்கள், 146 பேராசிரியர்கள், 1 நூலகர், 1 உடற்கல்வி இயக்குநர், 36 கௌரவ விரிவுரையாளர்கள், 9 **PTA** ஆசிரியர்கள், 22 அலுவலகப் பணியாளர்கள் மற்றும் 15 இளநிலை, 15 முதுநிலை, 7 ஆய்வியல் நிறைஞர், 4 ஆராய்ச்சி பட்டப் படிப்புகளுடன் இக்கல்லூரி தென் தமிழகத்தின் ஒரு மாபெரும் அரசு கலைக் கல்லூரியாக, இரு சுழற்சிகளில் செயல்பட்டு வருகின்றது.

இக்கல்லூரி 1998-ஆம் ஆண்டு தன்னாட்சி தகுதியினை பெற்றதுடன் தேசிய தர மதிப்பீட்டுக் குழுவினரால் மூன்றாம் சுழற்சியில் **“A”** தரச்சான்றும் பெற்று, “அறிவே ஆற்றல்” என்ற உன்னத குறிக்கோளை உயிர் மூச்சாக்கி பல்வேறு பரிமாணங்களில் தன் சிறப்பைப் பறைசாற்றி வருகிறது.

இக்கல்லூரியின் செயல்பாட்டினை முன்னெடுத்துச் செல்வதில், கல்லூரியின் தலைவராக பொறுப்பேற்ற நாள் (02.07.2018) முதல் இன்று வரை முனைப்புடன் செயல்படும் முதல்வர், அர்ப்பணிப்புடன் கூடிய அனைத்துத் துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்களின் பணி அளப்பரியது. மாணவியர் வளர்ச்சியில் கல்லூரிப் பேரவையின் பங்கு

மகத்தானது. இக்கல்வியாண்டில் கல்லூரிப்பேரவை, முதல்வர் முனைவர் திருமதி.சூ.வானதி அவர்களைத் தலைவராகவும், இயற்பியல் துறைத்தலைவர் முனைவர்.திருமதி.கா.சரோஜா அவர்களை பேரவைத் துணைத் தலைவராகவும் கொண்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது,

பேரவைத் தலைவியாக ஆங்கில இலக்கியம் மூன்றாமாண்டு மாணவி செல்வி மு.தீபிகா தேர்வு செய்யப்பட்டு சிறப்பாக செயல்பட்டார். அனைத்துத் துறை பேராசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து நன்முறையில் கடமையாற்றி, இக்கல்லூரி மாட்சிமை நிறைந்த கல்லூரியாக உருவெடுக்க உறுதுணையாக இருந்து வருகின்றனர்.

இக்கல்வியாண்டில் பொருளியல் துறையைச் சார்ந்த முனைவர்.த.சுஜாதா, வணிகவியல் துறையைச் சார்ந்த முனைவர்.கி.நிர்மலா, தாவரவியல் துறையைச் சார்ந்த முனைவர்.ரா.லதா மற்றும் முனைவர்.வெ.பாண்டிமாதேவி ஆகிய இணைப்பேராசிரியர்கள் பதவி உயர்வு பெற்று இரண்டாம் நிலை அரசுக் கல்லூரிகளின் முதல்வர்களாக சிறப்புடன் செயல்படுகின்றனர்.

இக்கல்லூரியில் சிறப்பாக பணியாற்றிய மேனாள் கணிதத் துறைத் தலைவர் முனைவர். திருமதி. க. வேலம்மாள் மற்றும் வேதியியல் துறை இணைப்பேராசிரியர் திருமதி.ப.ரூபகல்யாணி இவர்கள் விருப்ப ஓய்வு பெற்றனர். பணிக்காலத்தே ஓய்வறியாப் பணியாற்றிய அவர்களின் பணி பாராட்டுதலுக்குரியது.

வணிக நிர்வாகவியல் துறையைச் சார்ந்த முனைவர்.டே.ஜெபப்ரியா உதவிப் பேராசிரியை நம் கல்லூரியின் துணை தேர்வு கட்டுப்பாட்டு அலுவலராகப் பொறுப்பேற்றுள்ளார்.

இக்கல்வியாண்டில் முனைவர் பட்டம் பெற்று தமக்கும் கல்லூரிக்கும் பெருமை சேர்த்த பேராசிரியர்கள், இவர்கள்

1. திருமதி து.விஜயராணி, இணைப் பேராசிரியர், தமிழ் துறை,

2. திருமதி.நா.தேன்மொழி, உதவிப்பேராசிரியர், ஆங்கிலத்துறை,
3. திருமதி.பா.மாரியம்மாள், உதவிப்பேராசிரியர், வேதியியல் துறை,
4. திருமதி.மு.பொ.சிவசங்கரி, உதவிப்பேராசிரியர், தாவரவியல் துறை.
5. திருமதி.நா.சாந்தி, இணைப்பேராசிரியர்,மனையறிவியல் துறை.
6. திருமதி.பா.புவனேஸ்வரி,உதவிப்பேராசிரியர்,மனையறிவியல் துறை.
7. திருமதி.அ.ச.பேபிராணி,இணைப்பேராசிரியர்,கணினியறிவியல் துறை,
8. திருமதி.ஆர்.ரஹ்மத்நிஷா,கௌரவ விரிவுரையாளர்,புவியியல் துறை,
9. திருமதி.எம்.வித்யா, கௌரவ விரிவுரையாளர்,கணினியறிவியல் துறை.

இக்கல்வியாண்டில் 122 பேராசிரியர்கள் புத்தாக்கப் பயிற்சி / குறுகிய காலப் பயிற்சி **(Short Term Course)** மற்றும் ஆசிரியர்கள் மேம்பாட்டு செயல்பாடு **(FDP)** இல் கலந்து கொண்டுள்ளனர்.

இக்கல்வியாண்டில் ஆய்வு வழிகாட்டிகளான முனைவர். திருமதி.வெ.கி.சாந்தி, கணிதத்துறை தலைவர் அவர்கள் வழிகாட்டுதலின் கீழ் 4 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர் மற்றும் முனைவர்.திருமதி.மீ.கனகதுர்கா, கணினி பயன்பாட்டியல் உதவி பேராசிரியர் வழிகாட்டுதலின் கீழ் 2 பேர் முனைவர் பட்டம் பெற்றுள்ளனர் என்பதில் பெருமையடைகிறோம்.

மேலும் இக்கல்வியாண்டில் கணினியறிவியல் துறைத் தலைவர் மற்றும் இணைப்பேராசிரியர் முனைவர்.திருமதி.ம.சுமதி, முனைவர்.திருமதி.சு.சுகுணா இணைப்பேராசிரியர் கணினியறிவியல் துறை மற்றும் வரலாற்றுத் துறையைச் சார்ந்த முனைவர்.திருமதி.து.ஜெயகுமாரி ஞானதீபம், உதவிப் பேராசிரியர் ஆகியோர் தலா ஒரு பி.எச்.டி மாணவிகளை உருவாக்கியுள்ளனர் என்பதில் பெருமையடைகிறோம்.

இக்கல்வியாண்டில் எம் பேராசிரியர்கள் சர்வதேச கருத்தரங்குகளில் 26 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், சர்வதேச இதழ்களில் 9 ஆராய்ச்சிக் கட்டுரைகளையும் சமர்ப்பித்துள்ளனர். இணைய வழியில் பல்றே தேசிய மற்றும் சர்வதேச கருத்தரங்குகளில் பங்கேற்றதுடன், பல்வேறு கருத்தரங்குகளில் சிறப்பு விருந்தினராகவும் பங்கேற்றுள்ளனர் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

2021 – 2022 ஆம் கல்வியாண்டில் பேரவை சார்பாக, பேரவை துவக்க விழா, சுதந்திர தின விழா, காந்தி ஜெயந்தி விழா மற்றும் குடியரசு தின விழா மற்றும் சர்வோதய தினம் ஆகியவை சிறப்பாக் கொண்டாடப்பட்டன.

முனைவர்.திருமதி.எ.எமிமாள் விக்டோரியா உதவிப்பேராசிரியை விலங்கியல் துறை மற்றும் முனைவர். அ.ச.பேபிராணி கணிப்பொறியியல் இணைப்பேராசிரியர் ஆகியோர் "ஆசிரியர்களுக்கான குறு ஆய்வுத் திட்டத்தையும்", முனைவர்.திரு.த.ராம்குமார், உதவிப்பேராசிரியர் வணிகநிர்வாகவியல்துறை தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின்(TANSCHE) நிதி பெற்றதும் பாராட்டுதலுக்குரியது ஆகும்.

2021-2022-ம் கல்வியாண்டில் அனைத்து துறைகளிலும் இளநிலை மற்றும் முதுநிலை மாணவிகளுக்கு மன்றக்கூட்டம் நடத்தப்பட்டது.

இக்கல்வியாண்டில் அனைத்து துறைகளிலும் மாணவிகளை ஊக்குவிக்கும் நோக்கில் கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ரங்கோலி போட்டி, ஓவியப் போட்டி, திறனறிவுத் தேர்வு மற்றும் வினாடி வினா போன்ற பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இக்கல்வியாண்டில் புவியியல் துறை மூன்றாம் ஆண்டு ஆங்கில வழியில் பயிலும் மாணவி செல்வி.பி.சிந்து காந்தி மியூசியம், நாட்டு நலப்பணித் திட்டம் மற்றும் பிறதுறைகள் நடத்திய பல்வேறு பேச்சுப்

போட்டிகளில் கலந்து கொண்டு கல்லூரி அளவில் பரிசுகள் பெற்றதுடன், வேறு பல அமைப்புகளால் நடத்தப் பெற்ற சொற்பொழிவு போட்டிகளில் மாநில அளவில் கல்லூரி சார்பாக கலந்து கொண்டு பரிசுகள், விருதுகள் மற்றும் பதக்கங்கள் பல பெற்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். மேலும் **LIC Golden Jubilee Scholarship 2021-2022**-காக ரூபாய் 20000/- பரிசு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**TANSCHE** ஆசிரியர் பணியிடைப் பயிற்சிதிட்டம்

தமிழ்நாடு மாநில உயர்கல்விமன்றம், 2022 மே 5 மற்றும் 6 ஆம் தேதிகளில் ஆசிரியர் பணியிடைப் பயிற்சி திட்டத்தை நடத்துவதற்காக, எங்கள் கல்லூரியை, நோடல்மையமாக தேர்வு செய்தது.

அதனடிப்படையில் **Physical Science and Mathematical Science** ஆகிய இரு **Domain**களில் பிற அரசு / அரசு உதவி பெறும் கல்லூரி பேராசிரியர்கள் சுமார் 224 பேருக்கு தேர்ந்த வல்லுநர்களால் சிறப்பாக பயிற்சி வழங்கப்பட்டது. இந்நிகழ்விற்கு ஒருங்கிணைப்பாளர்களாக **Dr.G.**சரோஜா, இயற்பியல் துறைத்தலைவர், **Dr.**சோ.அருள்மொழி, வேதியியல் துறைத்தலைவர், **Dr.V.K.**சாந்தி, கணிதத் துறைத்தலைவர் மற்றும் **Dr.C.** ராஜேஸ்வரி உதவிப்பேராசிரியர், கணிதத்துறை ஆகியோர் செயல்பட்டனர். பங்கேற்பாளர்களிடமிருந்து சிறப்பான மீள்கருத்து பெறப்பட்டது.

06.05.2022 அன்று மதுரை கல்லூரிக்கல்வி மண்டல இணை இயக்குநர் முனைவர். திரு. **P.**பொன்முத்துராமலிங்கம் அவர்கள் நிறைவு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தேர்ச்சி விபரம் (2020-2021)

| வ.எண். | பாடப்பிரிவு | ஆங்கில வழி / தமிழ் வழி | இளநிலை | முதுநிலை |
|---|---|---|---|---|
| 1. | வரலாறு | ஆங்கில வழி | **93.33 %** | **100%** |
| | | தமிழ் வழி | **98.41%** | |
| 2. | பொருளாதாரம் | ஆங்கில வழி | **94.03%** | **100%** |
| | | தமிழ் வழி | **98.33%** | |
| 3. | ஆங்கிலம் | முதல் சுழற்சி | **100 %** | **100%** |
| | | இரண்டாம் சுழற்சி | **100 %** | |
| 4. | தமிழ் | முதல் சுழற்சி | **96.92 %** | **95.83 %** |
| | | இரண்டாம் சுழற்சி | **100 %** | |
| 5. | வணிகவியல் | முதல் சுழற்சி | **98.55 %** | **100 %** |
| | | இரண்டாம் சுழற்சி | **98.41 %** | |
| 6. | கணிதவியல் | முதல்சுழற்சி ஆங்கில வழி | **100%** | **96.55 %** |
| | | முதல்சுழற்சி தமிழ்வழி | **100%** | |
| | | இரண்டாம் சுழற்சி ஆங்கில வழி | **97.56 %** | |
| 7. | இயற்பியல் | ஆங்கில வழி | **100%** | **100 %** |
| | | தமிழ் வழி | **100 %** | |
| 8. | வேதியியல் | ஆங்கில வழி | **100 %** | **100 %** |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தமிழ் வழி | **100 %** | |
| 9. | விலங்கியல் | ஆங்கில வழி | **94.59 %** | **94.12 %** |
| | | தமிழ் வழி | **97.14 %** | |
| 10. | புவியியல் | ஆங்கில வழி | **100%** | **100%** |
| | | தமிழ் வழி | **92.68 %** | |
| 11. | மனையறிவியல் | முதல் சுழற்சி | **96.15%** | **100 %** |
| 12. | கணினி அறிவியல் | முதல் சுழற்சி | **100 %** | **100 %** |
| | | இரண்டாம் சுழற்சி | **96.15 %** | |
| 13. | தாவரவியல் | முதல் சுழற்சி | **100 %** | **100 %** |
| 14. | கணினிபயன்பாட்டியல் | முதல் சுழற்சி | **96.77%** | **100 %** |
| 15. | வணிக மேலாண்மையியல் | முதல் சுழற்சி | **100 %** | **93.75%** |

காந்திய சிந்தனைக் கல்வி (2021 – 2022)

நமது கல்லூரியின் காந்திய சிந்தனைப்புல படிப்பு வட்டத்தின் சார்பாக கஸ்தூரிபாய் மற்றும் தில்லையாடி வள்ளியம்மை பிறந்த நாள் சிறப்பு சொற்பொழிவுக் கூட்டம் 23.02.2022 அன்று ஆங்கிலத்துறை ஆய்வகத்தில் வைத்து கல்லூரி முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. ஆங்கிலத்துறை தலைவர் முனைவர். தா.மோ.அமலா அவர்கள் வரவேற்புரை ஆற்றினார். திரு.நடராஜன் சிறப்புக்கல்வி அலுவலர், காந்தி நினைவு அருங்காட்சியகம், மதுரை, சிறப்புரையாற்றினார். 150 மாணவிகள் பங்கேற்று பயன் பெற்றனர். நிகழ்வு ஏற்பாடுகளை காந்திய சிந்தனைப் புல படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி.பொ.சுபா மற்றும் முனைவர்.பெ.சாவித்திரி ஆகியோர் செய்திருந்தனர்.

காந்திய சிந்தனை சான்றிதழ் மற்றும் பட்டயப்படிப்பு தேர்வு எழுதும் மாணவிகளுக்கு சிறப்பு வகுப்புகள் 17.03.2022 முதல் 22.03.2022 வரை ஆறு நாட்களுக்கு கயல் அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றது. மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகத்தின் சிறப்புக் கல்வி அலுவலர் திரு.நடராஜன் அவர்கள் மாணவிகளுக்கு காந்திய விழுமியங்கள், காந்திய கல்வியும் சமூகமும் காந்திய அரசியலும் பொருளாதாரமும் உள்ளிட்ட தலைப்புகளில் சிறப்புரையாற்றி, சிறப்பு காந்திய வகுப்புகள் எடுத்தார். இதில் 1146 மாணவிகள் பங்கேற்று பயன்பெற்றனர். அனைத்து ஏற்பாடுகளையும் காந்திய சிந்தனைப்புல படிப்பு வட்ட ஒருங்கிணைப்பாளர்கள் திருமதி.பொ.சுபா மற்றும் முனைவர்.பெ.சாவித்திரி ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

காந்தியசிந்தனை தேர்ச்சி விபரம் (2020 – 2021)

2020-2021–ம் ஆண்டிற்கான ஒருங்கிணைப்பாளார்களாக ஆங்கிலத்துறையைச் சேர்ந்த பேராசிரியர்கள் முனைவர் திருமதி. நீ.மீனாட்சி மற்றும் திருமதி. ஜே.ஷாகின் செயல்பட்டனர். 2020 – 2021-ம் ஆண்டிற்கான காந்திய சிந்தனை பட்டயத் தேர்வில் 745 மாணவியர் கலந்துகொண்டு 100 % தேர்ச்சி பெற்றனர். 542 மாணவிகள் சான்றிதழ் தேர்வில் கலந்து கொண்டு 92% தேர்ச்சி பெற்றனர்.

உடற்கல்வித்துறை

நமது கல்லூரி விளையாட்டுக்குழு, கல்லூரி முதல்வர், முனைவர். திருமதி. சூ.வானதி அவர்கள் தலைமையிலும் விளையாட்டுக்குழு உறுப்பினர்களின் ஆலோசனைகளோடும் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது.

விளையாட்டுக்குழு உறுப்பினர்கள்

தலைவர் : முனைவர்.திருமதி.சூவானதி – முதல்வர்

செயலாளர்: முனைவர்.திரு. செ.ரமேஷ் - உடற்கல்வி இயக்குநர்

நிதியாளர் - திருமதி.எம்.கிருஷ்ணவேணி

உறுப்பினர்கள்:-

1.முனைவர் திருமதி.வ.சூரியகாந்தி – பொருளியல்

2.முனைவர்.திருமதி.எம்.முத்துராணி – தமிழ்

3.திருமதி.ஆர்.எ.லதாதேவி – கணிதவியல்

4.முனைவர்.திருமதி.ஜெ.ஜெயகுமாரி ஞானதீபம் – வரலாறு

5.முனைவர் திருமதி.பூ.சாந்தி – வேதியியல்

6.முனைவர்.திருமதி.அ.பியூலா மேரி - இயற்பியல்

7.முனைவர்.திரு.மா.ரவிச்சந்திரன் - கல்லூரி நூலகர்

8.செல்வி.மு.புவனேஸ்வரி – மாணவச் செயலாளர்

இக்கல்வியாண்டின் தொடக்கத்தில் மாணவியர் சேர்க்கையின் போது விளையாட்டில் தனித்திறமை பெற்ற மாணவியருக்கு முன்னுரிமை அளித்து சிறப்பு இட ஒதுக்கீட்டின்படி இளங்கலை / இளமறிவியல் பாடப்பிரிவுகளுக்கு 3% விழுக்காடு ஒதுக்கீடும், முதுகலை / முதுஅறிவியல் பாடப்பிரிவிற்கு 2% விழுக்காடு ஒதுக்கீடும் வழங்கப்பட்டு தகுதியின் அடிப்படையில் மாணவியர் சேர்க்கப்பட்டனர்.

இந்த கல்வி ஆண்டில் நமது மாணவியர்கள் அகில இந்திய பல்கலைக்கழக அளவிலும், மதுரை காமராஜர் பல்கலைக்கழக அளவிலும், மாநில அளவிலும் மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளிலும் பங்கேற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்து முத்திரை பதித்துள்ளனர்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான கால்பந்து போட்டி மதுரை எம்.ஜி.ஆர். விளையாட்டரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் ஆண்டு முதுநிலை இயற்பியல் மாணவி சு.ஐஸ்வர்யா சிறப்பாக விளையாடி கர்நாடக மாநிலம் பெங்களுருவில் உள்ள கிரைஸ்ட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தென்மண்டல பல்கலைக்கழகங்களுக்கான போட்டியில் விளையாட மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்காக தேர்வு பெற்றதும், மேலும் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கான போட்டியில் விளையாட மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்காக தேர்வு பெற்றதும் குறிப்பாக மத்திய அரசால் இந்திய அளவில் மிகப் பிரமாண்டமாக பெங்களுருவில் நடத்தப்பட்ட “கேேளா இந்தியா” போட்டிக்கு தேர்வு பெற்றதும் அரசுக்கல்லூரிகளை தலைநிமிர்ந்து பார்க்க வைத்தது என்பது மிகவும் பெருமைக்குரிய நிகழ்வாகும்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிக்கு இடையேயான ஜுடோ போட்டி நமது கல்லூரி கயல் அரங்கில் சிறப்பாக நடத்தப்பட்டது. இப்போட்டியில் முதலாம் ஆண்டு வரலாற்றுத்துறை மாணவி பா.அமிர்தாதேவி சிறப்பாக விளையாடியதுடன் டெல்லியில் கான்பூரில் உள்ள சத்ரபதி சாகு ஜி மகாராஜ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கான ஜுடோ போட்டியில் விளையாட மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்காக தேர்வு பெற்றார். மேலும் இம்மாணவி தமிழக அரசால் நடத்தப் பெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான ஜுடோ போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்று ரூபாய் ஐம்பதாயிரம் (50,000/-) சிறப்பு பரிசையும் பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான வாள்சண்டை போட்டி மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி உள்ளரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் மூன்றாம் ஆண்டு கணினி பயன்பாட்டியல் ஆர்.எம். சுஷ்மிதா ஸ்ரீ, முதலாம் ஆண்டு பொருளியல்

எம்.கவிதா, மூன்றாம் ஆண்டு பொருளியல் கே.மகாலட்சுமி மற்றும் மூன்றாம் ஆண்டு ஆங்கிலம் எம்.அனுசியா ஆகியோர் சிறப்பாக விளையாடியதுடன் பஞ்சாப் மாநிலம் குருநானக் தேவ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அகில இந்தியப் பல்கலைக்கழகங்களுக்கான வாள்சண்டைப் போட்டியில் விளையாட மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்காக தேர்வு பெற்றதும் நமது கல்லூரிக்கு பெருமைக்குரிய நிகழ்வாகும்.

மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தின் கல்லூரிகளுக்கு இடையேயான கபாடி போட்டி லேடி டோக் கல்லூரி உள்ளரங்கில் நடைபெற்றது. இப்போட்டியில் முதலாம் ஆண்டு முதுநிலை தமிழ்த்துறை மாணவி அ.ஜோதிகா சிறப்பாக விளையாடியதுடன், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தென் மண்டல பல்கலைக்கழகங்களுக்கான கபாடி போட்டியில் விளையாட மதுரை காமராஜர் பல்கலைக்கழக அணிக்காக தேர்வு பெற்றார் என்பது மகிழ்ச்சிகுரிய நிகழ்வாகும்.

அகில இந்திய கேம்ஸ் அண்ட் பெடரேசன் சார்பாக கோவா மாநிலத்தில் நடைபெற்ற த்ரோபால் போட்டியில் இரண்டாம் ஆண்டு வணிகநிர்வாகவியல்துறை மாணவி எம்.ரோகினி தமிழ்நாடு அணியின் சார்பாக கலந்து கொண்டு சிறப்பாக விளையாடி தங்கப்பதக்கம் வென்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

<u>பல்கலைக்கழக அளவில்</u>

மதுரை, விருதுநகர், தேனி, திண்டுக்கல் ஆகிய நான்கு மாவட்டக் கல்லூரிகள் கலந்து கொண்ட மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தின் நீச்சல் போட்டியில் நமது கல்லூரியின் சார்பாக கலந்து கொண்டு பரிசு பெற்ற நிகழ்வு, பிற அரசுக் கல்லூரிகளுக்கும் ஊக்கத்தை அளிப்தாக அனைவரும் வியந்து பாராட்டினர்.

குறிப்பாக இளங்கலை முதலாம் ஆண்டு வணிகவியல் எ.சுவேதா என்ற மாணவி 100 மீட்டர் பட்டர்பிளை பிரிவில் தங்கப் பதக்கமும்,மேலும்

இளங்கலை முதலாம் ஆண்டு இயற்பியல்துறை எம்.உத்திரவள்ளி என்ற மாணவி 50 மீட்டர் ப்ரெஸ்ட் ஸ்ட்ரோக் பிரிவில் தங்கப் பதக்கமும் பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்

விளையாட்டில் தனித்திறன் கொண்ட மாணவிகளை ஊக்கப்படுத்தும் விதமாக் மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்லூரிகளுக்கிடையேயான விளையாட்டு போட்டிகளில் குறிப்பாக கபாடி, கையுந்துப்பந்து, பூப்பந்து, இறகுப்பந்து, கோ-கோ, கால்பந்து, சதுரங்கம், மேசைப்பந்து, கூடைப்பந்து, நீச்சல், தடகளம் ஆகிய 11 போட்டிகளில் நமது கல்லூரியின் சார்பாக அதிக அணிகள் கலந்து கொண்டு விளையாடியுள்ளனர்.

<u>மாநில அளவில்</u>

மதுரையில் நடைபெற்ற மாநில அளவிலான கராத்தே போட்டியில் குமிதே பிரிவில் முதலாம் ஆண்டு விலங்கியல் பயிலும் தி.சுவேதா என்ற மாணவி தங்கப்பதக்கம் பெற்றுள்ளார்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற மாநில குத்துச்சண்டை போட்டியில் முதலாம் ஆண்டு வணிகநிர்வாகவியல் பயிலும் வர்சினி என்ற மாணவி தங்கப்பதக்கம் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்.

மதுரை மாவட்ட கபாடி கழகம் நடத்திய மாநில போட்டிக்கான தெரிவுப் போட்டியில் இளங்கலை முதலாம் ஆண்டு பயிலும் எ.செல்வமீனாட்சி என்ற மாணவி தேர்வு செய்யப்பட்டு கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியில் நடைபெற்ற மாநிலப் போட்டியில் கலந்து கொண்டது, நமது கல்லூரிக்கு மிகவும் பெருமை சேர்ப்பதாக அமைந்தது.

<u>மாவட்ட அளவில்</u>

தேனி மாவட்டம் சின்னமனூரில் நடைபெற்ற கையுந்துப்பந்துப் போட்டியில் நமது கல்லூரி அணி சிறப்பாக விளையாடி மூன்றாமிடம் பிடித்துள்ளனர்.

<u>நம் கல்லூரி அளவில்</u>

மதிலகப் போட்டியின் முக்கிய நோக்கமாக கல்லூரியில் பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் விளையாட்டில் பங்கு கொள்ளும் வாய்ப்பை வழங்குவதற்காக பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு ஊக்கப்படுத்தப்பட்டது. குறிப்பாக மாற்றுத்திறன் மாணவிகளுக்கும் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரிய நிகழ்வாகும்.

மாணவியருக்கான குழுப்போட்டிகள் பிரிவில்:-

கபாடி, கையுந்துப்பந்து, கூடைப்பந்து, பூப்பந்து, இறகுப்பந்து, மேசைப்பந்து, கோ-கோ, கால்பந்து, சதுரங்கம், நீச்சல், எறிபந்து, யோகாசனம் ஆகிய 12 போட்டிகளும் நடத்தப்பட்டது.

மாணவியருக்கான தடகளப் போட்டி பிரிவில்:-

100 மீட்டர், 200 மீட்டர், 400 மீட்டர், 800 மீட்டர், 1500 மீட்டர், 3000 மீட்டர், குண்டுஎறிதல், வட்டு எறிதல், ஈட்டி எறிதல் ஆகிய 9 போட்டிகளும் நடத்தப்பட்டது.

மாற்றுத்திறன் மாணவியருக்கான பிரிவில்:

50 மீட்டர், 100 மீட்டர், 200 மீட்டர், குண்டுஎறிதல் ஆகிய போட்டிகளும் நடத்தப்பட்டது.

ஐக்கிய நாடுகள் சபையால் துறைகளை ஊக்குவிக்கும் நோக்கில் பின்பற்றப்படும் விழாக்களில் “நாட்டின் வளர்ச்சியில் மற்றும் அமைதியில் விளையாட்டின் பங்கு” என்கின்ற தினத்தை நமது கல்லூரியில் கொண்டாடும் நோக்கில் உடற்கல்வித்துறையில் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு வரலாறு ஆர்.சாரதாதேவி முதலிடத்தையும், இளங்கலை இரண்டாம் ஆண்டு தமிழ் எ.ப்ரித்திகா இரண்டாமிடத்தையும் மற்றும் மூன்றாம் ஆண்டு தமிழ் எ.அழகுமீனா மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

மாரத்தான் போட்டி

மாணவியர்களிடையே ஆரோக்கியம் சார்ந்த விழிப்புணர்வை தங்கள் வாழ் நாள் முழுவதும் பின்பற்ற வேண்டும் என்ற நோக்கில் அவர்களை மாரத்தான் போட்டிகளில் பங்கேற்பதற்கு நமது கல்லூரி முதல்வர் அவர்கள் சிறப்பு அனுமதி அளித்து ஊக்கப்படுத்தினார்.

அதனடிப்படையில்,பெண்கள் தினத்தை முன்னிட்டு பெண்களின் பாதுகாப்பையும் ஆளுமையையும் ஊக்கப்படுத்தும் விதமாக விழிப்புணர்வு தொடர் ஓட்டம் மதுரை கிரேட் டிரஸ்ட் நிறுவனத்தின் சார்பாக நடத்தப்பட்ட 6 கி.மீ. ஓட்டப் போட்டியில் இளங்கலை இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் பி.மூவேந்திரி இரண்டாமிடத்தையும், இளங்கலை முதலாம் ஆண்டு வரலாறு எஸ்.அன்னபூரணி மூன்றாமிடத்தையும், முதுகலை முதலாம் ஆண்டு தமிழ் எஸ்.சாந்தி ஐந்தாமிடத்தையும், முதுகலை முதலாம் ஆண்டு தமிழ் அ.ஜோதிகா ஆறாமிடத்தையும் வென்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மேலும், ஒத்தக்கடை போக்குவரத்து காவல்துறை மற்றும் ரோட்டரி கிளப் ஆகியோரால் நடத்தப்பட்ட போக்குவரத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட மாரத்தான் போட்டியில் பெண்கள் பிரிவில் இரண்டாயித்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டதில் நமது கல்லூரியைச் சேர்ந்த இளங்கலை இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் பி.மூவேந்திரி என்ற மாணவி 19ஆம் இடத்தையும், முதுநிலை முதலாம் ஆண்டு வேதியியல் எஸ்.பவித்ராதேவி என்ற மாணவி 20ஆம் இடத்தையும், இளங்கலை இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் சந்தியா 39ம் இடத்தையும் இளங்கலை முதலாம் ஆண்டு வணிக நிர்வாகவியல் ரா.வர்சினி 43ஆம் இடத்தையும் பெற்றனர். மேலும் இரண்டாம் ஆண்டு வணிகவியல் பொன்மதி, முதலாம் ஆண்டு வணிகவியல் திருசெல்வி, இரண்டாம் ஆண்டு வணிகவியல் புவனா பொன்னுத்தாய், இரண்டாம் ஆண்டு இளநிலை தாவரவியல் மீனாட்சி ஆகியோர் பதினோறு கிலோ மீட்டரை நிறைவு செய்து ஆறுதல் பரிசு பெற்று நமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

<u>கல்லூரி விளையாட்டு விழா</u>

நமது சிறப்பு விருந்தினா் திருமதி.ஆா்.பொன்னி, காவல்துறை துணைத்தலைவா், மதுரை சரகம் அவா்களும் மற்றும் திரு.ஜே.ரஞ்சித்குமாா், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் பயிற்சியாளா், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், மதுரை அவா்களும் தங்களின் பல பணிச்சூழல்களுக்கு மத்தியிலும் நம் கல்லூாி விளையாட்டு விழாவிற்கு வருகை புாிந்து மாணவிகளுக்கு ஊக்கமளித்து சிறப்புரையாற்றினாா்.

முனைவா்.திரு.செ.ரமேஷ், உடற்கல்வி இயக்குநா், உடற்கல்வித்துறை ஆண்டறிக்கையை வாசிக்கவும் மாணவச் செயலாளா் செல்வி.மு.புவனேஸ்வாி நன்றி நவில விளையாட்டு விழா இனிதே நிறைவடைந்தது.

<u>தேசிய மாணவா் படை</u>

எம் கல்லூாி தேசிய மாணவா் படை 2(TN) மாணவிகள் பட்டாலியன் மதுரை உள்ளடங்கி 6/1 கம்பெனியின் பொறுப்பாளராக வேதியியல் துறை உதவிப் பேராசிாியா் Lt.Dr.ரெ.ஆா்.முத்துசெல்வி அவா்கள் செயலாற்றி வருகிறாா். இதில் முதலாமாண்டு – 34 இராண்டாமாண்டு – 30 மூன்றாமாண்டு – 40 ஆக மொத்தம் 104 மாணிவிகளுடன் இயங்கி வருகிறது.

1.13.08.2021 அன்று லெப்டினன்ட் டாக்டா் ஆா்.முத்துசெல்வி மற்றும் 30 கேடட்களால் பிட் இந்தியா ஓட்ட உறுதிமொழி எடுக்கப்பட்டது.

2. 27.08.2021 அன்று NTA இடையப்பட்டியில் நடந்த குழு துப்பாக்கி சூடு அணி தோ்வில் III B.A English எஸ். ஷோபனா, II B.A English லீலா ஜெனிபா், சாா்ஜென்ட் A. யோகலெட்சுமி III B.B.A மற்றும் கேடட் R.சுபிக்ஷா ஆகியோா் கலந்து கொண்டனா்.

3. III B.A ஆங்கிலத்தில் மூத்த அதிகாாி S.ஷோபனா, III B.A ஆங்கிலத்தின் கேடட் கீழ் அதிகாாி B.புவனேஸ்வாி மற்றும் II BSc கணினி அறிவியலின் Lance Corporal A. நாகஸ்ரீ கிரண் ஆகியோா் NTA

இடையப்பட்டியில் 23.09.2021 முதல் 02.10.2021 வரை **RDC** இண்டர் யூனிட் குருப் முகாமில் கலந்து கொண்டனர்.

4. 02.10.2021 அன்று **Azadi ka Amrit Mahotsav** கொண்டாட்டங்களுக்கு ஏற்ப பிட் இந்தியா சுதந்திர ஓட்டம் 2.0 இல் **II BSc** கணினி அறிவியலின் **V..**அபிராமி, **III B.A** பொருளாதாரத்தின் **K..**மகாலெட்சுமி மற்றும் **III B.Sc** இயற்பியலின் **N.**நாகஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

5. 12.10.2021 அன்று நடந்த **NCC** துணை இயக்குநர் ஜெனரல் வருகையின் மரியாதை நிகழ்ச்சியில் **III B.A** பொருளாதாரம் **TM** கே.மகாலெட்சுமி **III B.Sc** இயற்பியலின் **N.**நாகஜோதி மற்றும் **III B.Com** எம். ரேணுகா தேவி ஆகிய மூன்று கேடட்கள் கலந்து கொண்டனர்.

6. 28.10.2021 அன்று 40 கேடட்கள் மற்றும் லெப்டினனட் டாக்டர் ஆர்.முத்துசெல்வி ஆகியோர் பொது மக்களிடையே தூய்மை விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக வளாக கேட் முதல் கோரிப்பாளையம் சந்திப்பு வரை தூய்மை இந்தியா பேரணி நடத்தப்பட்டது.

7. 22.10.21 முதல் 31.10.2021 வரை மற்றும் 26.11.2021 முதல் 05.12.2021 வரை **NTA** இடையப்பட்டியில் இயக்குனராக அளவிலான **RDC** பயிற்சியில் **II B.Sc** கணினி அறிவியலின் **Lance Corporal A.** நாகஸ்ரீ கிரண் கலந்து கொண்டனர்.

8. 28.11.2021 அன்று லேடி டோக் கல்லூரி வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட **NCC** தினக் கொண்டாட்டத்தில் லெப்டினனட் முனைவர் ஆர்.முத்துசெல்வி மற்றும் 45 கேடட்கள் கலந்து கொண்டனர்.

9. 26.12.2021 முதல் 01.01.2022 வரை **NTA** இடையப்பட்டியில் **"C"** சான்றிதழ் ஒருங்கிணைந்த ஆண்டு பயிற்சி முகாமில் லெட்டினனட் முனைவர்.ஆர்.முத்துசெல்வி மற்றும் 30 மூன்றாம் ஆண்டு கேடட்கள் கலந்து கொண்டனர்.

10. 02.01.2022 முதல் 06.01.2022 வரை NTA இடையப்பட்டியில் சான்றிதழ் ஒருங்கிணைந்த வருடாந்திர பயிற்சி முகாமில் 30 இரண்டாம் ஆண்டு கேடட்கள் கலந்து கொண்டனர்.

11. 01.01.2022 முதல் 31.01.2022 வரை புதுதில்லியில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பு முகாமில் தமிழ்நாடு, பாண்டிச்சேரி மற்றும் அந்தமான் நிக்கோபர் இயக்குநரகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய RDC குழுவில் இடம்பிடித்து, II B.Sc கணினி அறிவியலின் கார்ப்ரல் ஏ.நாகஸ்ரீ கிரண் நம் அனைவரையும் பெருமைப்படுத்தினார்.

12. 26.01.2022 மாநில அளவிலான குடியரசு தின அணிவகுப்பு அணிக்கு III B.A ஆங்கிலத்தின் கேடட் கீழ் அதிகாரி பி.புவனேஸ்வரி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

13. லெப்டினனட் முனைவர் ஆர்.முத்துசெல்வி 01.03.2022 முதல் 30.03.2022 வரை 30 நாட்களுக்கு மத்தியப் பிரதேசம் குவாலியரில் உள்ள அதிகாரிகள் பயிற்சி அகாடமியில் NCC புத்தாக்கப் பயிற்ச்சியில் கலந்து கொண்டு வெற்றிகரமாக முடித்தார்.

14. லேடி டோக் கல்லூரியில் 19..03.2022 மற்றும் 20.03.2022 அன்று நடைபெற்ற "பி" சான்றிதழ் தேர்வுகளில் 28 கேடட்கள் கலந்து கொண்டனர்.

15. லேடி டோக் கல்லூரியில் 02.04.2022 மற்றும் 03.04.2022 அன்று நடைபெற்ற "C" சான்றிதழ் தேர்வுகளில் 35 கேடட்கள் கலந்து கொண்டனர்.

16. லெப்டினனட் டாக்டர் ஆர்.முத்துசெல்வி மற்றும் 36 கேடட்கள் 21.04.2022 முதல் 30.04.2022 NTA இடையப்பட்டியில் ஆண்டு பயிற்சி முகாமில் கலந்து கொண்டனர்.

17. 25.05.2022 முதல் 03.06.2022 வரையிலான பிரிவுகளுக்கிடையேயான தால் சைனிக் குழுப் போட்டிகளுக்கான முகாமுக்கு **II B.A** ஆங்கிலத்தின் கார்ப்ரல் சுந்தரவல்லி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

<u>செஞ்சிலுவைச் சங்கம் - **YRC**</u>

செஞ்சிலுவைச் சங்க அலகுகள் சார்பாக இந்த வருடம் 23.12.2021 அன்று மாணவிகளுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் நமது கல்லூரியில் நடைபெற்றது. இதில் 154 மாணவிகள் பங்கு பெற்று பயனடைந்தனர். டாக்டர்.பட்டினத்தார் **YRC** மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆ.ச.ராஜ்குமார் பேரிடர் மேலாண்மை பயிற்சியாளர் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சியளித்தனர்.

ஜனவரி 5 முதல் 7ம் தேதி வரை மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற முதல் நாள் **Zonal level YRC** பயிற்சி முகாமில் 10 மாணவியர்கள் மற்றும் திட்ட அலுவலர்கள் திருமதி.கி.ஜானகி மற்றும் திருமதி.பாஷ்ய பிரபா உஷா நந்தினி கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

தேசிய இளைஞர் தினம், உலக மகளிர் தினம், அறிவியல் தினம், மற்றும் உலக **TB** தினத்தை முன்னிட்டு மதுரைக் காமராஜர் பல்கலைக் கழகம், அரசு இராஜாஜி மருத்துவமனை மற்றும் விவேகானந்த கல்லூரி நடத்திய கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, கவிதை வாசித்தல் போட்டி, ரங்கோலி போட்டி, மெஹந்தி போட்டிகள் மற்றும் வினாடி வினா நிகழ்ச்சியில் மாணவிகள் பங்கேற்று பரிசுகளைப் பெற்றனர்.

<u>நூலகம்</u>

எம் கல்லூரியில் ஒரு மைய நூலகமும் 15 துறை நூலகங்களும் செயல்பட்டு வருகின்றன. தற்போது நூலகத்தில் சுமார் 74,600 புத்தகங்கள் உள்ளன. அனைத்து புத்தகங்களும் **Dewey Decimal Classification** என்ற முறைப்படி பகுப்பாய்வு செய்யப்பட்டு , **Bar-Code Label** ஒட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு சிறந்த முறையில் அடுக்கிவைக்கப்பட்டு

பேராசிரியைகள் மற்றும் மாணவியர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

**ORIENTATION PROGRAMME:**

நூலகத்தைப் பயன்படுத்தி பயனடைவதற்காக ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் முதலாமாண்டு இளங்கலை மற்றும் முதுகலை மாணவியர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. மைய நூலகத்தினை சிறப்பாக பயன்படுத்திய இரண்டு பேராசிரியர்களுக்கும் மற்றும் இரண்டு மாணவியர்களுக்கும் புத்தகங்கள் பரிசளிக்கப்பட்டது.

எம் நூலகம் 2014-2015ஆம் ஆண்டு முதல் ஆண்டுசந்தா செலுத்தி INFLIBNET – N-LIST இல் உறுப்பினராக உள்ளது. இதன் மூலம் சுமார் 6000 E-Journals மற்றும் 30,00,000 E-Books பார்த்து பதிவிறக்கம் செய்ய இயலும்.மேலும் இவ்வசதியினை இணையதள (INTERNET) வசதியுள்ள எவ்விடத்திலிருந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

மாணவியர்களை ஊக்குவிக்கும் விதமாக அனைத்து போட்டி தேர்வுகளுக்கு தேவையான புத்தகங்கள்மிக அதிக அளவில் வாங்கப்பட்டு மேற்கோள் பிரிவில் (Reference Section) மாணவியர்களின் பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

**IRINS@SMGAC https://smgacw.irins.org**

நமது கல்லூரி பேராசிரியர்கள் அனைவருக்கும் ரிசர்ச்ஐடெண்டிபிகேஷன் உருவாக்கப்பட்டு IRINS (Indian Research Information Network System) இல் உறுப்பினராக்கப்பட்டுள்ளது.

**DIGITAL LIBRARY:**

இந்த ஆண்டு மின்னணு நூலகத்திற்கு புதிதாக 10 கணினிகள் உயர் கல்வித்துறையால் வழங்கப்பட்டுள்ளது. 21 கணினிகளுடன் கூடிய மின்னணு நூலகத்தை சிறப்பாக பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**E-GATE SYSTEM, OPAC** மற்றும் பல வகைகளில் நமது கல்லூரி நூலகம் சிறப்பான முறையில் இயங்குகிறது.

2021 – 2022 ஆம் கல்வியாண்டில் திட்டமில்லா கணக்கின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட அரசு நிதி 2,00,000/- த்திற்கு அனைத்து துறைகளுக்கும் சுமார் 287 புத்தகங்கள் வாங்கப்பட்டுள்ளன.

**NDLI CLUB @SMGACW** - தேசிய மின்னணு நூலக மன்றம்

நமது கல்லூரியில் தேசிய மின்னணு நூலக மன்றம் ஆரம்பிக்கப்பட்டு ஆரம்பவிழாவிற்கு, மதுரை நாடாளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய சு.வெங்கடேசன் அவர்கள் சிறப்பு விருந்தினராக வருகை புரிந்து மாணவியர்களை உற்சாகப்படுத்தினார்.

<u>கல்வி உதவித் தொகை</u>

| வ.எண். | உதவித் தொகையின் பெயர் | பயன் பெறும் மாணவிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக்கல்வி உதவித்தொகை | 1010 | ரூ.50,84,654.00 |
| 2. | கல்விக் கடன் சிறப்பு உயர்கல்வி உதவித்தொகை | இல்லை | கோவிட் - 19 காராணமாக கல்லூரி விடுதி திறக்கப்படாததால் உதவித் தொகை பெறப்படவில்லை. |
| 3. | தமிழ் வழிக் கல்வி உதவித்தொகை | 989 | ரூ.8,90,100.00 |
| 4. | பிற்பட்டோர், மிகவும் | 3140 | ரூ.79,73,304.00 |

| | | | |
|---|---|---|---|
| | பிற்பட்டோர் மற்றும் சீர் மரபினர் கல்வி உதவித் தொகை | | |
| 5. | மாற்றுத்திறனாளிகள் உதவித்தொகை | 35 | மாற்றுத்திறனாளி அலுவலகத்தின் மூலம் நேரடியாக உதவித் தொகை வரவுவைக்கப்படுகிறது. |
| 6. | சிறுபான்மையினர் கல்வி **(BCM,Christian)** உதவித்தொகை | 17 | சிறுபான்மையினர் அலுவலகத்தின் மூலம் மாணவிகளின் வங்கி கணக்கில் நேரடியாக உதவித் தொகை வரவு வைக்கப்படுகிறது |
| 7. | இதரவகையிலான உதவித்தொகை (பார்வையற்றோர் நலன் சார்ந்தது **blind organization)** | 14 | ரூ.1,40,000.00 |

<u>வேலைவாய்ப்பு வழிகாட்டிக் குழு</u>

வேலைவாய்ப்பு வழிகாட்டிக் குழுவிற்கு முதல்வர் முனைவர் சூ.வானதி அவர்கள் தலைவராகவும், ஒருங்கிணைப்பாளராக வரலாற்றுத்துறை இணைப்பேராசிரியர் முனைவர்.ரெ.சத்தியபாமா மற்றும்

துறைக்கு ஒருவர் என்று குழு உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் இக்குழு செயல்பட்டு வருகின்றது.

08.01.2022 அன்று **Magic Bus India Foundation** என்ற **NGO** அமைப்பு மாணவிகளுக்கு **online**-ல் நேர்முகத் தேர்வை நடத்தியதில் 2 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இயற்பியல் துறையை சார்ந்த **Dhuvanyasmine,** ஆங்கிலத் துறையை சார்ந்த **Muthulakshmi** ஆகிய இருமாணவிகளுக்கும் பணி ஆணை வழங்கப்பட்டது.

10.03.2022 அன்று நமது கல்லூரி வளாகத்தில் **CBRA Company** வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது. இதில் 3 மாணவிகளுக்கு வேலைவாய்ப்புக்குரிய ஆணை வழங்கப்பட்டது. **(R. Meena- B.B.A, K. Pavithra – B.Sc Maths, M. Roshini – B.C.A)**

ஓசூரில் உள்ள **DSK Innoscience Foundation** அமைப்பு மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்.சி கெமிஸ்ட்ரி பயின்று வருகின்ற மாணவிகளுக்கு வளாக வேலைவாய்ப்பு முகாமை 30.04.2022 அன்று நடத்தியது. இதில் எம்கல்லூரியிலிருந்து 10 மாணவிகள் கலந்து கொண்டதில் மாணவிகள் அருணாதேவி மற்றும் தாரணி இருவரும் முதல்சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

10.05.2022 அன்று நமது கல்லூரி வளாகத்தில் **BS Technology Private limited** கம்பெனி வேலைவாய்ப்பு முகாமை நடத்தியது. இதில் 20 மாணவிகள் வேலைவாய்ப்பு வழங்க தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

04.04.2022 முதல் **Group II & IIA** தேர்வுக்கு தயாராகிக் கொண்டிருக்கும் மாணவிகளுக்கு மதுரை வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் கல்லூரி வளாகத்தில் நடைபெற்று வருகின்றது.

முனைவர்.பர்வின் சுல்தானா மற்றும் திருமதி.பாரதி பாஸ்கர் அவர்கள் இணையவழியில் மாணவியருக்கு முறையே "வையத்தலைமை கொள்" மற்றும் "பெண்மைவெல்க" என்ற தலைப்புகளில் சிறப்புரையாற்றினார்கள்.

இக்கல்வியாண்டில் மூன்றாம் ஆண்டு புவியியல் துறையை சேர்ந்த பு.சிந்து 17 போட்டிகளில் பங்கேற்று பரிசு மற்றும் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.

<u>பெற்றோர் ஆசிரியர் கழகம்</u>

பெற்றோர் ஆசிரியர் கழக பொறுப்பாளர்களாக வரலாற்றுத்துறை இணைப் பேராசிரியர் முனைவர்.பா.விமலா மற்றும் புவியியல் துறைப் உதவிப் பேராசிரியர் முனைவர் அ.காந்திமதி ஆகியோர் சிறப்பாக பணிபுரிந்து வருகின்றனர். இக்கழகத்தின் கீழ் மாணவியரின் கல்விப் பணி தொய்வடையாது இருக்க ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாப் பணியாளர்கள் 33 பேர் பணிபுரிந்து வருகின்றனர்.

<u>மாணவ சமுதாய திட்டம்</u>

மாணவ சமுதாய திட்டம் விலங்கியல் துறைத் தலைவர் முனைவர்.திருமதி.வெ.கபிலா அவர்களை உபதலைவராகவும், வணிகவியல் துறைத்தலைவர் திருமதி.கா.சு.ஞானேஸ்வரி மற்றும் விலங்கியல் துறை உதவிப் பேராசிரியை திருமதி.பொ.யுவராணி ஆகியோரை செயற்குழு உறுப்பினராகக் கொண்டு செயல்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் கல்லூரியில் உள்ள அனைத்து துறைகளிலும் பயிலும் பார்வையற்ற, மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய சுமார் 136 மாணவிகளுக்கு ரூ49,640 சமமாக பிரித்து ரூ.365/- உதவித்தொகையாக ஒவ்வொரு மாணவிக்கும் வழங்கப்பட்டது.

செயல்பாடு நுகர்வோர் மன்ற

2021–22ம் கல்வியாண்டில் நுகர்வோர் மன்ற செயல்பாடுகள் பொருளியல் துறை மற்றும் வணிகவியல் துறை ஒருங்கிணைப்போடு செயல்பட்டு வருகிறது.

இம்மன்றத்திற்கு பொருளியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.திருமதி.மு.அருணா மற்றும் வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.திருமதி.தெ.ரீனா அவர்களும் ஒருங்கிணைப்பாளராக செயலாற்றி வருகிறார்கள்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 15.03.2022 அன்று தேசிய நுகர்வோர் பாதுகாப்பு தின விழாவினை ஒட்டி, கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவை நடைபெற்றது, அப்போட்டியில் நமது கல்லூரியை சார்ந்த மாணவிகள் 8 பேர் கலந்து கொண்டனர். ஆங்கிலத் துறையைச் சார்ந்த மாணவி தேவதர்சினிக்கு கவிதைப் போட்டிக்கான இரண்டாவது பரிசு மாவட்ட ஆட்சியர் அவர்களால் வழங்கப்பட்டது. கலந்து கொண்ட அனைத்து மாணவிகளுக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

கூட்டுறவுப் பண்டகசாலை

கூட்டுறவுப் பண்டகசாலையின் பொறுப்பாளர்களாக ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் திருமதி.ரா.ஞானசெல்வி மற்றும் கணிதத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் திருமதி.நே.ஏஞ்சலின் பென்சீரா ஆகியோரும் செயல்பட்டு வருகின்றனர். இப்பண்டகசாலை மூலமாக மாணவிகளுக்குத் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. குறைந்த பட்ச லாபத்தோடு மாணவியரின் நலன்கருதி செயல்படுவதால் இப்பண்டகச்சாலை மாணவிகளுக்கு பயன் உள்ளதாக அமைந்துள்ளது,

மாணவியருக்கான ஆற்றுப்படுத்தல் மையம்

கல்லூரியின் ஆற்றுப்படுத்தல் மையமானது விலங்கியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர். திருமதி.தை.ஹெலன் கிறிஸ்டினா அவர்களை ஒருங்கிணைப்பாளராகவும், மனையியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர்.திருமதி.இரா.சாரதா, தாவரவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர்.திருமதி.ஞா.கிரேஸ் லிதியாள் புஷ்பலதா, வணிக நிர்வாகவியல் துறைத்தலைவர் முனைவர்.ச.இராஜ ராஜேஸ்வரி ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

உலக மனநல தினம் 13.10.2021 அன்று கொண்டாடப்பட்டது, திருமதி.வ.மு.லில்லிகிரேஸ், துணைகாவல் கண்காணிப்பாளர், புதுக்கோட்டை மாவட்டம் - அவர்கள் **"Mental Health in an unequal world"** என்ற தலைப்பில் கலந்துரையாடல் முறையில் மாணவிகளிடம் பேசினார். இன்றைய இளைய சமுதாய பெண்கள் உணர்வுகளை சமநிலையில் வைப்பது மற்றும் நடத்தையை, சமூகபாகுபாட்டை மீறி எவ்வாறு காப்பது என்பதை எடுத்துரைத்தார்.

மேலும் மாணவியருக்கான பல்வேறு ஆற்றுப்படுத்துதல் நிகழ்வுகள் நடைபெற்றன.

ஆங்கில வாசகர், ஆராய்ச்சி மற்றும் நாடக மன்றங்கள்

ஆங்கிலத்துறை, மாணவியர் வாசிப்பு, ஆய்வு மற்றும் கலைத் திறன்களை மேம்படுத்தும் வகையில் வாசிப்பு, ஆராய்ச்சி மற்றும் நாடக மன்றங்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன.

வாசக மன்றத்தின் பொறுப்பாளர்களாக ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ஈ.பிரேமா மற்றும் முனைவர். பெ.சாவித்திரி செயல்பட்டு வருகின்றனர்.

புதுச்சேரி அரசு மகளிர் கலைக்கல்லூரியின் ஆங்கில உதவிப்பேராசிரியர் முனைவர்.சாந்தி பொன்னம்பலம் இணைய வழியில் "இலக்கியமும் வாழ்வும்" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

மத்திய செய்தித் தொடர்பு அலுவலர் திருமதி.கீதா இளங்கோவன் “பெண்ணியமும் வாசிப்பும்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

SR பொறியியல் கல்லூரி உதவிப்பேராசிரியர் திருமதி.சுகிர்தா மேரி இராஜம்மாள் “வாசிப்பை நேசிப்போம்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

எழுத்தாளர் மற்றும் ஊடகவியலாளர் திருமதி.கவிதா முரளிதரன் “பெண்களும் வாசிப்பும்” என்னும் தலைப்பில் உரையாற்றினார்.

வேலூர் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் முனைவர் வி.சரவணன் “வாசித்தல், ஆய்வு செய்தல், சிந்தித்தல்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

வாசகர் மன்றத்தின் மைல் கல் நிகழ்வாக, மாணவிகளின் புத்தக வெளியீட்டு விழா 05.05.2022 அன்று நடைபெற்றது. மதிப்பிற்குரிய, மதுரை நாடாளுமன்ற உறுப்பினர், திருமிகு.சு.வெங்கடேசன் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மூன்றாமாண்டு ஆங்கிலம் மாணவியரான, மு.தீபிகா எழுதிய **Debris of Stardust’** மற்றும் ச.சோபனா எழுதிய **‘Out of Exluansis’** ஆகிய புத்தகங்கள் வெளியிடப்பட்டன.

ஆராய்ச்சி மன்றத்தின் பொறுப்பாளராக உதவிப் பேராசிரியர் முனைவர்.ந.தேன்மொழி செயல்பட்டு வருகிறார்.

18.05.2022 அன்று நடைபெற்ற ஆராய்ச்சி மன்றக் கூட்டத்தில் ஏழு முதுகலை ஆங்கில மாணவியர் தம் ஆய்வுரைகளை வழங்கினர்.

நாடக மன்றத்தின் பொறுப்பாளர்களாக உதவிப் பேராசிரியர் திருமதி.கே.ஜானகி மற்றும் முனைவர்.வி.பொன்மாரி ஆகியோர் செயல்பட்டு வருகின்றனர். 24.09.2021 அன்று **‘Script Reading on Women Characters in Shakesphere’s Drama’** என்ற தலைப்பில் போட்டிகள் நடத்தப் பெற்று, பங்கேற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

26.03.2022 அன்று, அழியும் நிலையிலுள்ள நாட்டுப்புறக் கலைகளின் அவசியத்தையும், பயனையும் உணர்த்தும் விதமாக **'Script Reading on Women Characters in Shakesphere's Drama'** மற்றும் **'Self Defence Demo Class'** மாணவிகளுக்கு நடத்தப்பட்டது. **Sensai Dr.Muthumari, Internation Modern Marital Arts – Devarattam, Silambam Groups,** அவர்கள் தலைமையில் இப்பயிற்சி அளிக்கப்பட்டது. இம்மன்ற நிகழ்வுகளில் மாணவியர் ஆய்வாளர்களாகவும், கேள்வி எழுப்புவர்களாகவும், கலந்துரையாடல் செய்பவர்களாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## Readathon 2022

ஆங்கிலத்துறையில் முன்னெடுப்பாக இக்கல்வியாண்டில், துறைத்தலைவர் முனைவர் தா.மோ.அமலா அவர்களின் ஊக்குவிப்பில் முதலாமாண்டு மாணவியர் இடையே **"Readathon 2022"** என்ற தொடர் வாசிப்பு இயக்கம் துவக்கி வைக்கப்பட்டது. இதன் பொறுப்பாளராக உதவிப் போராசிரியர்கள், முனைவர் சு.ஜாகிரா பானு மற்றும் முனைவர்.ஞா.அருள் செல்வி மரியா ஆகியோர் செயல்படுகின்றனர்.

**18.05.2022** அன்று இப்புதிய நிகழ்வில் எட்டு முதலாமாண்டு மாணவியர், நூல் அறிமுகம் செய்து, மாணவியரிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்தனர்.

## தமிழ் உயராய்வு மையம்

பாரதி நினைவு நூற்றாண்டு விழா, சமூகநீதி நாள், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் வைர விழா, மொழி நாள் விழா, 75வது சுதந்திர அமிர்தப் பெருவிழா ஆகியவை தமிழ் உயராய்வு மையம் சார்பாக கொண்டாடப்பட்டது.

இளங்கலை முதலாமாண்டு முதல் சுழற்சி மாணவி தெ.ஐஸ்வர்யா பல்வேறு பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு பல்வேறு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும் ரொக்கப் பரிசுகளையும் பெற்றார்.

இரண்டாமாண்டு மாணவியர்களில், மங்கையர்க்கரசி கல்லூரி Zeal சார்பாக நடத்திய "புதையல் வேட்டை" எனும் போட்டியில் ஆ.க.பிரியதர்சினி, ர.லெட்சுமிபிரியா, சோ.நாகலெட்சுமி மூவரும் முதல் பரிசு பெற்றுக் கேடயமும் சான்றிதழும் பெற்றனர். அமெரிக்கன் கல்லூரி நடத்திய குறிஞ்சி 22ல் கவிதைப் போட்டியில் த.பிரியா முதல் பரிசும், வினாடி வினா மற்றும் உங்கள் விருப்பம் ஆகிய போட்டிகளில் முறையே கா.பாத்திமா சித்திகா, க.பாண்டிச்செல்வி மற்றும் ஜே.பிரியா, இரா.அபிராமி, ர.லெட்சுமிபிரியா, சோ.நாகலெட்சுமி, கா.பாத்திமா சித்திகா ஆகியோர் மூன்றாம் பரிசும் பெற்றனர். மேலும் பல்வேறு போட்டிகளில் மாணவிகள் கலந்து வெற்றி பெற்றுள்ளனர்.

இரண்டாமாண்டு முதற்சுழற்சி மாணவியர்களில் கா.பாத்திமா சித்திகா, சோ.நாகலெட்சுமி, வீ.இலக்கியா ஆகியோரும் மூன்றாமாண்டு முதற்சுழற்சி மாணவியர்களில் பொ.சுகாசினி, ஆ.தாமரை, இரா.கௌரி, மு.வைஷ்ணவி ஆகியோரும் அரசு நடத்தும் "இல்லந்தேடிக் கல்வித் திட்டத்தின்" சார்பாகப் பணியாற்றி வருகின்றனர்.

<u>ரோட்ராக்ட் அவை</u>

நம் கல்லூரியில் ரோட்ராக்ட் அவை ஆனது மதுரை மேற்கு ரோட்டரி கிளப்புடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. 2021 – 2022 ஆம் கல்வியாண்டில் அவையின் தலைவியாக ஆங்கிலத் துறையைச் சேர்ந்த முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி செல்வி வி.ஸ்ரீமதி தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆசிரியர் திருமதி. வி.பால முருகேஸ்வரி மற்றும் வணிகவியல் துறையைச் சார்ந்த உதவிப் பேராசிரியர் முனைவர் திருமதிஅ.தேன்மொழி செயல்பட்டு வருகிறார்கள்.

இந்த அவையின் சார்பாக 29.04.2022 அன்று "சுற்றுச்சூழல் விழிப்புணர்வு" என்ற தலைப்பில் மதுரை மேற்கு ரோட்டரி கிளப்பின் செயலாளர் திரு.பொன் குமார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு "நீர் ஆதாரங்களின் முக்கியத்துவம், சுற்றுச்சூழல் மற்றும் மரம் நடுதலின் முக்கியத்துவம்" குறித்து உரையாற்றினார்.

<u>நிச்மன்றம் (Niche)</u>

நிச்மன்றம் சார்பாக உலகமண் தினம் 06.12.2021 அன்று நினைவு கூறப்பட்டது. மதுரை அமெரிக்கன் கல்லூரியின் பசுமைக் கழகத்தின் கன்வீனர் டாக்டர் எம்.ராஜேஷ் அவர்கள் "மண் என்பது உயிர், அதன் பாதுகாப்பு" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். அதைத் தொடர்ந்து மண்ணின் முக்கியத்துவத்தை இரண்டாமாண்டு முதுகலை மாணவியருக்கு **Flash mob** மூலம் காட்சிப்படுத்தினார்.

21.02.2022 அன்று காலை 7.00 மணிமுதல் 9.00 மணி வரை எங்கள் கல்லூரி வளாகத்தில் உள்ள பறவைகளின் எண்ணிக்கை **(EBirding)** விலங்கியல் துறையின் நிச்மன்றம் மூலம் கணக்கிடப்பட்டது. இந்த **GBBC** (பெரிய கொல்லைப் புற பறவை எண்ணிக்கை) நிகழ்ச்சியில் நிச்மன்றம் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஜோதிசாம் உடன் 10 மாணவர் உறுப்பினர்கள் மதுரை அமெரிக்கன் கல்லூரியின் பசுமைக் கழகத்தின் கன்வீனர் டாக்டர் ராஜேஷ் மற்றும் 3 மாணவர் தன்னார்வலர்களும் கலந்துகொண்டனர்.

மேலும் உலக சிட்டுக்குருவிதினம் மற்றும் உலகதண்ணீர் தினத்தைமுன்னிட்டு இவை கொண்டாடப்பட்டது.

<u>முன்னாள் மாணவியர் சங்கம்</u>

முன்னாள் மாணவியர் சங்கம் செயலாளராக ஆங்கிலத்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.திருமதி.அ.இராஜேஷ்வர புஷ்பம் அவர்களையும், வணிகவியல் துறை உதவிப் பேராசிரியர்

முனைவர்.திருமதி.அ.சமீன் பானு அவர்களை பொருளாளராகவும், மேலும் 7 செயற்குழு உறுப்பினர்களையும் கொண்டு சிறப்புடன் செயலாற்றி வருகின்றது.

இக்கல்லூரியில் இறுதி ஆண்டு பயிலும் இளநிலை / முதுநிலை / ஆய்வியல் நிறைஞர் மற்றும் இறுதியாண்டு ஆராய்ச்சியாளர்கள் இதன் சங்க உறுப்பினர்களாகின்றனர்.

கல்லூரியின் வளர்ச்சிக்கு முன்னாள் மாணவியர்களின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது. **'Reconnect to Share and reunite to serve"** என்ற நோக்கத்துடன், பின்வரும் நிகழ்ச்சி நிரலுடன் ஜூம் மூலம் முதல் மெய்நிகர் முன்னாள் மாணவியர் சந்திப்பு ஜூலை 17, 2021 அன்று நடத்தப்பட்டது.

1. முன்னாள் மாணவியர் சங்கத்தை வலுப்படுத்துவதன் மூலம் மாணவர் சமூகத்திற்கு ஆதரவை வழங்குவது
2. 1965-ஆம் ஆண்டிலிருந்து மேன்மைதங்கிய முன்னாள் மாணவியரின் சுய விவரத்தைப் புதுப்பித்து, கல்லூரி இணையதளத்தில் பதிவேற்றம் செய்தல்
3. முன்னாள் மாணவியர்களின் **Guest Lecture Series** தொடங்கி முன்னாள் மாணவியர்கள் தங்கள் அனுபவங்கள் மற்றும் சாதனைகளைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் தற்போதைய தலைமுறையினரை நோக்குநிலைப்படுத்தவும், ஊக்குவிக்கவும் செய்தல்.
4. மாணவியர்களுக்கான வேலைவாய்ப்பு குறித்த வழி காட்டுதல் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்பாடு செய்தல்
5. ஆண்டுக்கு ஒருமுறையாவது முன்னாள் மாணவியர் சந்திப்பை சீரான இடைவெளியில் நடத்துதல்
6. கல்லூரி மற்றும் மாணவர் சமுதாயத்தினிடையே இணக்கமான உறவை ஊக்குவித்தல்

மேன்மைதங்கிய முன்னாள் மாணவி முனைவர். திருமதி. சூ.வானதி, நமது முதல்வர் மற்றும் முன்னாள் மாணவியர் சங்கத் தலைவர் விழாவிற்கு தலைமை தாங்கி சிறப்பு உரையாற்றினர். பல்வேறு துறைகளைச் சேர்ந்த முன்னாள் மாணவிகள் தங்களது மறக்க முடியாத

கல்லூரி நாட்களை மற்றும் அனுபவங்களை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொண்டனர். கலந்துரையாடல் நிகழ்ச்சிக்கு பின் முன்னாள் மாணவியரிடமிருந்து கருத்துகள் மற்றும் பரிந்துரைகள் பெறப்பட்டன.

<u>நாட்டு நலப் பணித்திட்ட அறிக்கை</u>

நம் கல்லூரியில் 5 அலகுகளில் (51,52,53,54 & 55) நாட்டுநலப் பணித் திட்டம் செயல்படுகிறது. ஒவ்வொரு அலகிலும் 100 மாணவிகள் வீதம் மொத்தம் 500 மாணவிகள் நலப் பணித்திட்டத்தில் பங்கேற்கின்றனர். நலப்பணித் திட்டத்தில் உதவிப்பேராசிரியர்கள் முனைவர்.திருமதி. சு.தேவிபாலா, முனைவர்.திருமதி.சு.மோ.நித்தியா ஜெனிட்டா, முனைவர்.திருமதி. மீ.கனகதுர்கா, முனைவர்.திருமதி. ச.கவிதா மற்றும் முனைவர். திருமதி.கு.லில்லி மேரியூக்கரிஸ்டா ஆகியோர் திட்ட அலுவலர்களாக பணியாற்றி வருகிறார்கள்.

02.06.2021 அன்று **Field Outreach Bureau of Govt. of India** வும்,தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமும் (இந்திய அரசாங்கம்) இணைந்து "கோவிட் 19 மற்றும் கருப்பு பூஞ்சை" பற்றிய விழிப்புணர்வு இணையவழி கருத்தரங்கம் ஏற்பாடு செய்தது. இதில் **Dr.(Captain).Augustus Samuel Dodd,** தலைமை நிர்வாக அதிகாரி, கிரேஸ்கென்னட் பவுண்டேஷன் ஹாஸ்பிட்டல், மதுரை, அவர்கள் நோயின் அறிகுறிகள் மற்றம் பாதுகாக்கும் வழிமுறைகள் பற்றி எடுத்துரைத்தார். இக்கருத்தரங்கில் நம் கல்லூரியின் நாட்டுநலப் பணித்திட்ட அலுவலர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

17.06.2021 அன்று **M.S** செல்லமுத்து மனநலம் மற்றும் புணர்வாழ்வு மையம் நடத்திய **"Training on Psychosocial Care during Covid"** பயிற்சி பட்டறையில் அனைத்து நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

நாட்டு நலப் பணித்திட்ட அலுவலர் முனைவர்.திருமதி.ச.கவிதா, 20.06.2021 போதை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு 21.06.2021 மற்றும்

22.06.2021 ஆகிய இரு தினங்கள் மாணவர்களுக்கு கட்டுரை போட்டி, வாசகம் எழுதும் போட்டி மற்றும் கவிதை போட்டி நடத்தப்பட்டது.

கர்மவீரர் காமராஜ் அவர்களின் பிறந்தநாளான கல்வி வளர்ச்சி நாளை கொண்டாடும் விதமாக 14.07.2021 முதல் 16.07.2021 வரை மாணவிகளுக்கு இணையவழி வினாடிவினா போட்டி நடத்தப்பட்டது. இதில் ஏறத்தாழ 850 மாணவிகள் கலந்து கொண்டனர்.

கோவிட் 19 பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதமாக 07.08.2021 முதல் 09.08.2021 வரை மாணவிகளுக்கு வாசகம் எழுதும் போட்டி, ஓவியப்போட்டி மற்றும் வினாடிவினா போட்டிகள் நடத்தப்பட்டது.

கோவிட் 19 தடுப்பூசி முகாம் 01.09.2021 முதல் 03.09.2021 வரை நம் கல்லூரியில் நடத்தப்பட்டது. இதனை நாட்டுநலப் பணித்திட்ட மாணவிகள் ஒழுங்குபடுத்தினர்.

16.09.2021 அன்று குடற்புழு நீக்க மாத்திரைகள் அனைத்து மாணவிகளுக்கும் கல்லூரி முதல்வர் முனைவர். திருமதி.சூ.வானதி அவர்கள் தலைமையில் வழங்கப்பட்டது.

01.10.2021 அன்று காந்தி ஜெயந்தியை கொண்டாடும் விதமாக "இன்றைய காந்திகள்" தன்னறம் நூல்வெளி புத்தகம் பற்றிய கருத்துரை, "காந்தியும் காந்தியின் சீடர்களும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு மற்றும் தன்னறம் நூல் வெளியின் "இன்றைய காந்திகள்" என்ற புத்தகத்தில் இடம் பெற்றுள்ள ஆளுமைகளை பற்றிய கருத்துரை நடைபெற்றது. இக்கருத்துரையை கல்லூரி முதல்வர் முனைவர்.திருமதி.சூவானதி தலைமையேற்று நடத்ினார்.

01.1.2021 அன்று நாட்டுநலப் பணித்திட்ட நாளை கொண்டாடும் விதமாக இணையவழி கருத்தரங்கு நடைபெற்றது. முனைவர். ரா. அருணா, உதவிப்பேராசிரியர் மற்றும் நாட்டுநலப் பணித்திட்ட அலுவலர், தியாகராசர் கல்லூரி, மதுரை அவர்கள் **"Be a volunteer"** என்ற தலைப்பில் உரையாற்றினார்.

04.10.2021 அன்று **Dr.T.R.**ஜெயகிருஷ்ணன் கால்நடை நலஅலுவலர் மதுரை **"Animal welfare – A sensitive global issue"** என்ற தலைப்பில் உரையாற்றினார்.

**Dr.A.P.J.** அப்துல்கலாம் அவர்களின பிறந்தநாளான இளைஞர் எழுச்சிதினம் 15.10.2021 அன்று **Dr. K.** சிவசுப்பிரமணியன், முதல்வர், விவசாயகல்லூரி, தேனி அவர்கள் **"Empowerity youth for a better Tomorrow"** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

29.10.2021 அன்று திரு.ச.நடராஜன், கல்வியாளர், காந்திநினைவு அருங்காட்சியகம், மதுரை அவர்கள் "பட்டேலின் பார்வையில் இந்தியா" என்ற தலைப்பில் இணையவழி வாயிலாக சிறப்புரையாற்றினார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டதினம்-2021, முன்னிட்டு நாட்டுநலப் பணித்திட்ட மாணவிகள் அனைவரும் கல்லூரி முதல்வர் முனைவர்.திருமதி.சூ.வானதி அவர்களின் தலைமையில் உறுதிமொழி மேற்கொண்டனர்.

நாட்டு நலப்பணித்திட்டத்தின் சார்பாக கோவிட்-19 தடுப்பூசி முகாம் 04.12.2021 மற்றும் 09.12.2021 ஆகிய இருதினங்கள் நம் கல்லூரியில் நடத்தப்பட்டது. இதில் 04.12.2021 அன்று 357 மாணவிகளும் 09.12.2021 அன்று 400 மாணவிகளும் பங்குகொண்டு பயனடைந்தனர்.

மகாகவி பாரதியின் பிறந்த நாளான 11.12.2021 அன்று **"Gender Equity"**என்ற தலைப்பில் திருமதி.சித்ராகணபதி, மேலாளர், கடம்பவனம், மதுரை அவர்கள் இணைய வழிவாயிலாக சிறப்புரையாற்றினார்.

16.12.2021 அன்று நாட்டுநலப் பணித்திட்ட மாணவிகளுக்கு, எமது கல்லூரியின் விலங்கியல்துறை உதவிப்பேராசிரியை முனைவர். **D.**ஹெலன் கிறிஸ்டினா அவர்கள் **"Living the life"** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

24.01.2022 அன்று தேசிய பெண் குழந்தைகள் நாளை முன்னிட்டு திருமதி.தங்கவதனா பாலகிருஷ்ணன், வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம் அவர்கள் **"Empowerment of Girl Child"** என்ற தலைப்பில் இணையவழி வாயிலாக சிறப்புரையாற்றினார்.

தேசியவாக்காளர் தினத்தை முன்னிட்டு 25.01.2022 அன்று தேசியவாக்காளர் உறுதிமொழியை அனைத்து நாட்டுநலப் பணித்திட்ட மாணவிகளும் மேற்கொண்டனர்.

29.01.2022 அன்று நாட்டுநலப் பணித்திட்ட முதலாமாண்டு மாணவிகளுக்கு புத்தொளி பயிற்சி நடத்தப்பட்டது. முனைவர். **S.** சவுந்தர்ராஜன், உதவிப்பேராசிரியர், ராஜாதுரைசிங்கம் அரசுகலைக் கல்லூரி, சிவகங்கை அவர்கள் சிறப்புரையாற்றினார். 31.01.2022 தியாகிகள் தினத்தை முன்னிட்டு முனைவர். சு.வெற்றிகார்த்திக், காந்திகிராம பல்கலைக்கழகம், காந்திகிராமம் அவர்கள் **"Shanti sena:Gandhi's Nonviolent Army''** என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

27.02.2022 அன்று நடைபெற்ற போலியோ சொட்டு மருந்துவமுகாமில் 9 நாட்டுநலப் பணித்திட்ட மாணவிகள் கலந்து கொண்டனர்.

14.03.2022 மற்றும் 15.03.2022 ஆகிய இருதினங்கள் ஆயுஷ்-ன் **AKAM-ன்** மருத்துவ முகாம், கல்லூரி முதல்வர், முனைவர்.சூவானதி அவர்களின் தலைமையில் நடத்தப்பட்டது. இம்முகாமில் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

16.03.2022 முதல் 22.03.2022 வரை நடைபெற்ற **National Integration camp-2022, Bengaluru city University,** முகாமில் எமது கல்லூரியின் நாட்டுநலப் பணித்திட்ட மாணவி Ms.S.காருண்யா II BA English, Shift-I கலந்து கொண்டார்.

23.03.2022 அன்று தியாகிகள் தினத்தை முன்னிட்டு கல்லூரி முதல்வர் தலைமையில் உறுதிமொழி மேற்கொள்ளப்பட்டது. மேலும் எம்

கல்லூரியின் பொருளியில்துறை உதவிப்பேராசிரியர் முனைவர்.ஆ.புவனேஸ்வரி அவர்கள் சிறப்புரையாற்றினார்.

27.03.2022 அன்று நாட்டுநலப்பணித் திட்டமாணவிகள் கல்லூரி வளாகத்தை சுத்தம் செய்தனர்.

28.03.2022 தேசியவாக்காளர் விழிப்புணர்வு விழாவை முன்னிட்டு மாணவிகளுக்கு கோலபோட்டி, கவிதைபோட்டி, வாசகம் எழுதும் போட்டி மற்றும் **Digital painting** போன்ற போட்டிகள் நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

“போஷன் பக்வாடா” 21.03.2022 முதல் 04.04.2022 வரை அனுசரிக்கப்பட்டது. இதன் ஒரு பகுதியாக 04.04.2022 அன்று முனைவர். பு.மங்கை கஸ்தூரி, உதவிப்பேராசிரியர், தாவரவியல் துறை, **“Population wellness- Win Anemia”** என்ற தலைப்பில் நாட்டுநலப் பணித்திட்ட மாணவிகளிடையே சிறப்புரையாற்றினார்.

11.05.2022 அன்று வ.உ.சி. அவர்களின் 150வது பிறந்த நாளை கொண்டாடும் பொருட்டு நடமாடும் புகைப்பட கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை 2087 மாணவிகள் கண்டு பயனடைந்தனர். இதனை நாட்டுநலப் பணித்திட்ட மாணவிகள் ஒழுங்குபடுத்தினர்.

கொடுஞ்செயல் எதிர்ப்பு நாள் உறுதிமொழி 20.05.2022 அன்று கல்லூரி முதல்வர் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது,

<u>அறிவியல் மன்ற அறிக்கை</u>

எமது கல்லூரியின் அறிவியல் மன்றம் முதல்வர் முனைவர்.திருமதி.சூ.வானதி அவர்கள் தலைமையில், வேதியியல்துறை, இணைப்பேராசிரியர் திருமதி.ப..ருபகல்யாணி அவர்களை ஒருங்கிணைப்பாளராகவும் அவரது விருப்ப ஓய்விற்குப்பின் வேதியியல் துறை உதவிப் பேராசிரியர் முனைவர் மீனாட்சி அவர்களை ஒருங்கிணைப்பாளராகவும் இயற்பியல்துறை உதவிப் பேராசிரியர் முனைவர்.

திருமதி. இரா.விஜயலெட்சுமியை செயலாளராகவும் கொண்டு செயல்படுகிறது.

பல்வேறு துறைகளிலிருந்து 12 பேராசிரியர்கள் மற்றும் ஒவ்வொரு துறையிலிருந்து 5 மாணவிகள் அறிவியல் குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

உலக சுற்றுச்சூழல் தினம், உலக இயற்கை பாதுகாப்பு தினம், உலக யானைகள் தினம், உலக ஓசோன் தினம் இவற்றை முன்னிட்டு இணையவழி வினாடிவினா போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டிகளில் சுமார் 1000க்கு மேற்பட்ட மாணவியர் பங்கேற்றனர்.

முனைவர்.ஏ.பி.ஜே..அப்துல்கலாம் அவர்களின் 90-வது பிறந்த நாளை முன்னிட்டு “நான் என்னவாக விரும்புகிறேன்” என்ற தலைப்பில் கட்டுரை, ஓவியப் போட்டிகள் நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்களை பெற்ற மாணவியருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது,

தேசிய அறிவியல் தினமான 28.02.2021 அன்று அறிவியல் மன்றம், இயற்பியல் துறை, இளைஞர் செஞ்சிலுவை மற்றும் BTSS இணைந்து கருத்தரங்கம் மற்றும் விழிப்புணர்வு நாடகம் நடத்தினார்கள்.

<u>மீனாட்சி இணைய முற்றம்</u>

தீநுண்மித் தொற்றுக் காலத்தில் இணையவழி வகுப்புகளும் தேர்வுகளும் நடந்த தருணத்தில் மாணவியர் மனம் பண்பாடு மிளிர்வதற்கு எமது கல்லூரி முதல்வர். முனைவர். சூ.வானதி அவர்களின் சிந்தனையில் முகிழ்ந்த அற்புதத் திட்டம் இது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது மற்றும் நான்காவது வெள்ளிக்கிழமைகளில் மாலை 6.00 மணி தொடங்கி 7.00 மணி வரையிலான இணையவழித் தொடர் நிகழ்வில் எம்.கல்லூரி மாணவியரும் ஆசிரியரும் தங்களது வாசிப்பு அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளும் களம் இது,

27.08.2022 அன்று நமது கல்லூரியின் முன்னாள் முதல்வர் முனைவர் சீ.மங்கையர்கரசி அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட இத்தொடர் நிகழ்வில் எமது கல்லூரியின் முன்னாள் பேராசிரியர்களும் மாணவியர்களும் தங்களது வாசிப்பு அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள தற்போது படித்துக் கொண்டிருக்கும் மாணவியரும் தாங்கள் வாசித்த நூல் ஒன்றினைப் பகிர்ந்து கொள்கின்ற இந்நிகழ்வு தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

எமது கல்லூரிப் பேராசிரியர்களும் மாணவியரும் பங்கேற்கும் இந்நிகழ்வில் எமது முதல்வரும் தமது வாசிப்பு அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறார்.

இணைய நிகழ்வை தமிழ் உயராய்வு மைய இணைப் பேராசிரியர் முனைவர் சு.சந்திரா அவர்கள் ஒருங்கிணைக்க கணினிப் பயன்பாட்டியல் துறைத் தலைவரும் இணைப்பேராசிரியருமான திருமதி.இரா.ராஜராஜேஸ்வரி அவர்கள் தொழில் நுட்பத் தொடர்பினை இயைபுப்படுத்துகிறார்கள். வரலாற்றுத் துறை இணைப்பேராசிரியர் ரெ.சத்தியபாமா மனையறிவியல் துறைத் தலைவரும் இணைப்பேராசிரியருமான முனைவர் ஷர்மிளா ஆகியோரும் இந்நிகழ்வை நடத்துவதில் பெரும் பங்காற்றுகிறார்கள். இணையவழியாகத் தொடரும் இம் மீனாட்சி இணைய முற்றம் நூல் வாசிப்பை ஊக்கப்படுத்தும் ஒரு தொடர் நிகழ்வாகும்.

<u>மென் திறன் மேம்பாட்டுதிட்டம் **"Talking Daffodils"** (டாக்கிங் டாஃ.போடில்ஸ்)</u>

மதுரை மீனாட்சி கல்லூரி மாணவிகளின் மென்திறனை மேம்படுத்தும் வகையில் கல்லூரியின் முதல்வர் **Dr.S.**வானதியின் தொடர்முயற்சியால் **'Talking Daffodils"** என்ற மென்திறன் மேம்பாட்டு திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. 10 வாரகால பாடத்திட்டத்தில் மொத்தம் பத்து அமர்வுகள் இருந்தன. அமர்வுகள் இணைய வழியில் ஒவ்வொரு வியாழக்கிழமை மாலை 5.00 மணி முதல் 6.00 மணி வரை நடத்தப்பட்டது. ஒவ்வொரு அமர்விலும் அந்த வாரத்திற்கான பாடத்தைக் கையாளும் ஒரு வளநபர் இருந்தார். ஒவ்வொரு அமர்வுக்குப் பிறகும் ஒரு பின்னூட்ட செயல்பாடு இருந்தது. ஒவ்வொரு அமர்விலும எங்கள் கல்லூரியின் இரண்டு ஆசிரியர்கள் வழிகாட்டிகளாக செயல்பட்டனர். கூகுள்

வகுப்பறை அவர்களின் பணிகளைச் சமர்ப்பிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் பயன்படுத்தப்பட்டது.

தொடக்க அமர்வில் சென்னை அண்ணாபல்கலைக்கழகத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர்.வீணாசெல்வம் அவர்கள் 'திறமையான தொடர்பு'' என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். மென்திறன் திட்டத்திற்கான பெயர் தேர்வு மற்றும் பாடத்திட்டத்தின் வடிவமைப்பிற்கு தனது பாராட்டுகளைப் பொழிந்தார். இது கணினிபயன்பாட்டுத் துறையின் இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் திருமதி.ஆர்.ராஜராஜேஸ்வரியின் கவிதை வெளிப்பாடு மாணவ பங்கேற்பாளர்களை "பேசும்'' டாஃபோடில்களாக இருக்கவும், அவர்களின் எண்ணங்கள் மற்றும் செயல்களுக்கு குரல்கொடுக்க நம்பிக்கையைப் பெறவும் ஊக்குவித்தார். வணிகநிர்வாகத் துறைத்தலைவர் டாக்டர் எஸ்.ராஜராஜேஸ்வரி 10 வாராந்திர அமர்வுகளையும் அயராது ஒருங்கிணைத்தார். பாடப்பிரிவு நடவடிக்கைகளை முனைவர் ஜே.பி.சர்மிளா. இணைபேராசிரியர் மற்றும் மனையியல் துறைத்தலைவர் ஒருங்கிணைத்தார்.

10 வாரகால அமர்வுக்குப் பின் மதுரை, தியாகராஜர் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆங்கிலப் பேராசிரியர் ராஜா கோவிந்தசாமி முன்னிலையில், கல்லூரி முதல்வர் தலைமைவகித்து, பாராட்டுவிழா நடைபெற்றது. புகழ்பெற்ற மென்திறன் பயிற்சியாளராக இருந்த ஐயா, தனது பாராட்டுரையில், புதிய யோசனை, பாடத்திட்ட வடிவமைப்பு பங்களிக்கும் ஆசிரியர்களின் ஆர்வம் மற்றும் மாணவர் பயனாளிகளை வளப்படுத்தி மேம்படுத்துவதில் முதல்வரின் தொலைநோக்குப் பார்வையைப் பாராட்டினார். வழிகாட்டுதல், பங்கேற்பு மற்றும் அனுபவப்பூர்வ கற்றல் மூலம் மாணவர்கள் வாழ்நாள் முழுவதும் கற்றலை தாங்களாகவே முன்னெடுத்துச் செல்வதற்கு வழிகாட்டிகளைக் கொண்டுள்ள இந்த பாடநெறி ஒரு புதுவகையானது என்றார். அதைத் தொடர்ந்து மாணவ தன்னார்வலர்கள் ஒவ்வொரு வாரத்தின் செயல்பாடுகள் குறித்து கருத்துகளை வழங்கினர் மற்றும் அவர்களின் ஆதாய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர். தன்னார்வலர்களுக்கு சிறந்த பங்கேற்பாளர் பரிசுகள் வழங்கப்பட்டன. 10 வாரதிட்டத்தில் தொடர்ந்து கலந்துகொண்டு குறைந்தது 4 முதல் 5 பணிகளுக்குச் சமர்ப்பிக்க முடிந்த மாணவர்கள் சான்றிதழ்கள் மற்றும் பேட்ஜ்களுடன் பாராட்டுப் பெற்றனர். ஆர்வமுள்ள வழிகாட்டிகளும் வழிகாட்டி சான்றிதழ்களுடன் ஊக்குவிக்கப்பட்டனர். வாராந்திர தொகுதிகளின் வலையொளி

(You Tube) இணைப்புகள் கல்லூரியின் அனைத்து மாணவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டன.

முதல்வர், பாடத்திட்டவடிவமைப்பாளர், ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் வழிகாட்டிகளின் கூட்டுமுயற்சிகள் திட்டத்தின் கற்றல் விளைவுகளை அடைய வழிவகுத்தது. எங்கள் கல்லூரியில் சில நூறு மாணவர்களிடையே விழிப்புணர்வையும் நிலையான மாற்றத்தையும் உருவாக்க முடிந்தது. இது எளிதான சாதனை அல்ல. குறிப்பாக பத்து வாரங்களுக்கு மேல் ஆர்வம் நீடித்தது என்பது சிறப்புமிக்கது.

<u>தொழில்முனைவோர் மேம்பாட்டு மையம்</u>

1. 25.09.21 அன்று கல்லூரியின் தொழில்முனைவோர் மேம்பாட்டு மைய (EDC – Entrepreneurship Development Cell) ஒருங்கிணைப்பாளர் ச.கவிதா மற்றும் 18 இரண்டாம் ஆண்டு MBA மாணவிகள், மதுரை மாவட்ட குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கம், மதுரை (MADITSSIA) மற்றும் மாவட்ட தொழில் மையம் (District Industries Center – DIC), இணைந்து நடத்திய ஒரு நாள் ஏற்றுமதியாளர்கள் கான்க்ளேவ், ஏற்றுமதி கண்காட்சி மற்றும் மாநாட்டில் பங்கேற்றனர். நிகழ்ச்சியானது வெளிநாட்டு வர்த்தக இயக்குநரகத்துடன் (வணிகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் இந்திய அரசாங்கம்) மடீட்சியா அரங்கத்தில் நடத்தப்பட்டது.

2. 16.10.2021 அன்று, மதுரை மாவட்ட குறு மற்றும் சிறு தொழில்கள் சங்கத்தின் (MADITSIA) புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட Ec உறுப்பினர்களுக்கான நடைமுறைகள் குறித்த ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சியை கல்லூரியின் Foulke's அரங்கத்தில் நடத்த உதவியது.

3. 12.11.21 அன்று கல்லூரியின் EDC மற்றும் வணிக நிர்வாகத் துறை KVIC, கோட்ட அலுவலகம் மதுரை, இணைந்து மாணவர்களுக்கான MSME வெபினார் திட்டத்தின் கீழ் தொழில்முனைவு குறித்த SAMBHAV – e தேசிய அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சியை (NLAP) நடத்தியது.

## அகத்தர மதிப்பீட்டுக் குழு (IQAC)

மாறிவரும் கல்வி நிலைப்பாடுகளுடன் இசைந்து இருக்க, IQAC புதிய சவால்களை தொடர்ந்து எதிர்கொள்கிறது. சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தல் IQAC நிறுவனத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். IQAC யின் அனைத்து திட்டங்களும் முதல்வா் தலைமையில் IQAC ஒருங்கிணைப்பாளா், முனைவா்.பு.பியூலா, உதவிப் பேராசிரியா் ஆங்கிலத் துறை மற்றும் துறைத்தலைவா்கள் IQAC உறுப்பினா்களைக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் சிறப்பு நிகழ்வுகளாக உடுமலைப்பேட்டை அரசுக் கலைக் கல்லூரியின் இணைப் போராசிரியரும் ஆங்கிலத்துறை தலைவருமான டாக்டா் ஏ.வாசுதேவன் அவா்களால் **'Assessment and Accreditation: Revised Guidelines for Autonomous Institution 2021"** குறித்த பயிலரங்கம் நடத்தப்பட்டது. **UGC** விதிமுறைகளை பின்பற்றி **NAAC-INTERNAL AUDIT,** மற்றும் **NAAC** செயல்முறையின் தொடர்ச்சியாக, **ACADEMIC AND ADMINISTRATIVE AUDIT** டாகடா்.ஜி.சி.ஆபிரகாம் அமெரிக்கன் கல்லூரியின் தாவரவியல் துறை, இணைப்பேராசிரியா் மற்றும் துறைத்தலைவா், டாக்டா்.ஞானசேகா், இணைப்பேராசிரியா் மற்றும் துறைத்தலைவா் இயற்பியல் துறை மற்றும் **IQAC** ஒருங்கிணைப்பாளா் அமெரிக்கன் கல்லூரி, இவா்களுடன் **DR.N.** அருண் நாகேந்திரன் இணைப் பேராசிரியா் விலங்கியல் துறை, மேலும் **IQAC** ஒருங்கிணைப்பாளா் தியாகராஜா் கல்லூரி அடங்கிய நிபுணா் குழுவால் நடத்தப்பட்டது.

## பல்கலைக்கழக மானியக்குழு

முதல்வா் அவா்களின் தலைமையில் நம் கல்லூரியின் பல்கலைக்கழக மானியக் குழுவின் ஒருங்கிணைப்பாளா்களாக முனைவா்.செ.செந்தாமரை, உதவிப் பேராசிரியா், வரலாற்றுத்துறை, முனைவா்.க.செல்வராணி, உதவிப்பேராசிரியா், இயற்பியல்துறை, மற்றும் முனைவா்.சு.ஜாகிரா பானு உதவிப்பேராசிரியா், ஆங்கிலத் துறை ஆகியோா்

செயல்பட்டு வருகின்றனர். பல்கலைக் கழக மானியக் குழுவினரால் கல்லூரி தன்னாட்சி நீட்டிப்பிற்காக விண்ணப்பம் அனுப்பப்பட்டுள்ளது.

2022 – 2023ம் கல்வி ஆண்டிற்கான பாடத் திட்டக் குழு கூட்டம் நடத்துவதற்கு ஏதுவாக பாடத்திட்ட மேம்பாட்டு குழு கூட்டம் நடத்தப்பட்டுள்ளது. அதில் மாணவியரின் கல்வி வளர்ச்சிக்கு தேவையான பாடத்திட்டம் மற்றும் தேர்வுமுறை மாற்றங்கள் குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது. 2017 – 2018 ஆம் கல்வி ஆண்டில் நம் கல்லூரியில் புதிதாக கொண்டுவரப்பட்ட பாடப்பிரிவுகளுக்கான மதுரை காமராசர் - பல்கலையின் நிலையான அனுமதி ஆணை பெறுவதற்கு வேண்டப்பட்டுள்ளது. மேலும் அனைத்து துறை மன்றங்கள், சங்கங்கள், ஆற்றுப்படுத்துதல் குழு, வேலை வாய்ப்பு வழிகாட்டிக் குழு, விளையாட்டு குழு, நூலகக் குழு, இணையக் குழு, அறிவியல் மன்றக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு அவைகளின் செயல்முறைகளுக்கு ஆட்சி மன்ற நிலைக் குழு கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

<u>ரூசா (RUSA)</u>

முனைவர்.ஜி.மங்கை கஸ்தூரி, தாவரவியல் உதவிப்பேராசிரியர் மற்றும் முனைவர்.டி.உமாமதி, வேதியியல் உதவிப் பேராசிரியர், இந்த கல்வியாண்டில் ரூசா ஒருங்கிணைப்பாளர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

22.03.2022 அன்று ரூசா செமினார் ஹாலில் மகளிர் தினத்தை கொண்டாடும் வகையில் முதற்கட்ட படத்தொகுப்பு போட்டி “22 ஆம் நூற்றாண்டுப் பெண்” என்ற தலைப்பில் நடத்தினார்கள். நம் கல்லூரியின், இளங்கலை மற்றும் முதுகலை உட்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த மொத்தம் 21 மாணவியர் போட்டியில் பங்கேற்றனர். 21 பங்கேற்பாளர்களில் சிறந்த ஐந்து பேர் அனுபவம் வாய்ந்த பேராசிரியர்களால், ரூசா மாநில திட்ட இயக்குனரகம், சென்னை வழங்கிய விதிகளின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டனர். மதுரை மாவட்ட அளவில் எங்கள் மாணவர்கள், **P.A.** ஜனரஞ்சனி, புவியியல் **EM** மற்றும் சு.செல்ல மீனா **II** ஹோம்சயின்ஸ் இரண்டாம் மற்றும் மூன்றாம் பரிசுகளை வென்றார்கள்.

“ஒரு வாழ்க்கை – திறன்கள்’ 12 வது பேட்ச் மூன்றாம ஆண்டு UG மாணவர்களுக்கு 05.04.2022 முதல் 07.04.2022 வரை கூகுள் மீட் பிளாட்பார்ம் மூலம் காலை 10.30 மணி முதல் 12.00 மணி வரை நம் கல்லூரியில் மூன்று நாள் பயிலரங்கு நடத்தப்பட்டது. நம் கல்லூரியின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த ஐந்நூறு மூன்றாம் ஆண்டு இலங்கலை மாணவர்கள் இந்தப் பயிலரங்கில் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

ஏப்ரல் 5, 2022 அன்று, முதல் நாள் பயிலரங்கின் தொடக்க நிகழ்ச்சியில், எமது கல்லூரி முதல்வர் முனைவர்.S.வானதி, வரவேற்புரை ஆற்றினார். மூன்று நாள் பயிலரங்கில் திருமதி லட்சுமி சுப்ரமணியன், நிர்வாக இயக்குனர், குளோபல் அட்ஜஸ்ட்மெண்ட்ஸ் அறக்கட்டளை, சென்னை, “பெண்கள் முன்னேற்றம்” என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார்.

07.04.2022 அன்று பயிலரங்கின் மதிப்புரை நிகழ்ச்சி நடத்தப்பட்டது. டாக்டர். டி.உமாமதி, வேதியியல் துறை உதவிப் பேராசிரியை, மூன்று நாள் பயிலரங்கம் குறித்து விளக்கினார். பல்வேறு துறைகளைச் சேர்ந்த மாணவர்கள் கருத்துரை வழங்கினர். பயிலரங்கம் முடிந்ததும், கூகுள் படிவங்களைப் பயன்படுத்தி மாணவர்களிடமிருந்து ஆன்லைன் கருத்து சேகரிக்கப்பட்டது.

இப்பயிலரங்கின் மூலம் பெண்களின் வலிமையை எவ்வாறு உருவாக்குவது மற்றும் பெண்களை மேம்படுத்துவது என்பதை பற்றி அனைத்து மாணவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தினர். பயிலரங்கு வெற்றிகரமாக அமைந்தது.

<u>பொறுப்பாசிரியர் மாணவியர் கூட்டம்</u>

கல்லூரியில் ஒவ்வொருதுறையிலும் ஒவ்வொரு ஆசிரியர் தம் வகுப்பு மாணவியர்களுக்கு பொறுப்பாசிரியராக இருந்து மாணவியர் நலம் பேணும் திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் இரண்டு முறை ஆலோசனைக் கூட்டங்கள் அனைத்துத் துறைகளிலும் நடத்தப்படுகிறது.

பொறுப்பாசிரியர்கள் மூலம் மாணவியருக்கு கல்வியின் முக்கியத்துவம், ஒழுக்கம், காலந்தவறாமை பற்றியும் அவ்வப்போது அறிவுறுத்தப்படுகிறது. பொறுப்பாசிரியர்கள் தேவையான நேரங்களில் பெற்றோர்களை அழைத்து மாணவியர்களின் நடவடிக்கை மற்றும் அவர்களது கல்வி முன்னேற்றத்தைப் பற்றியும் ஆலோசனைகளும் அறிவுரைகளும் வழங்கிவருகின்றனர்.

இக்கல்வியாண்டில் இக்கல்லூரியின் வளர்ச்சிக்கும், சிறப்புக்கும், மேம்பாட்டிற்கும், பெண்களின் முன்னேற்றத்திற்கும் காரணமாக உள்ள தமிழக அரசுக்கும், பல்கலைக்கழக மானிய குழுவிற்கும், கல்லூரியின் அனைத்து செயல்பாடுகளுக்கும் உறுதுணையாக நிற்கும் எம் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கும், மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்திற்கும், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், மாநகராட்சி ஆணையர், பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும் பெற்றோர் ஆசிரியர் கழகத்திற்குகும், முன்னாள் மாணவியர் சங்கத்திற்கும், கல்லூரியின் மேன்மைக்கு அரும்பாடுபடும் பேராசிரியர்களுக்கும், ஆசிரியர் அல்லாத பணியாளர்களுக்கும், இதர பணியாளர்களுக்கும், பத்திரிக்கை நண்பர்களுக்கும், மற்றும் மாணவியர்களுக்கும் இக்கல்லூரியின் சார்பாக என் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.